பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சிலம்பில் நாடக அரங்கு

44

முனைவர் கபிரீகா.
தமிழ்த்துறைத் தலைவர்
செவாலியர் டிதாமஸ் எலிசபெத் மகளிர். கல்லூரி
பெரம்பூர், சென்னை-11.
preethailamaran@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இளங்கோவடிகளின் அரங்கேற்று காதையில் நாடக அரங்கிற்கான மண்ணகம் தெரிவு செய்வது குறித்தும் நாடக அரங்கு சமைப்பது குறித்தும் மிக நுட்பமான செய்திகள் கூறப்பட்டுள்ளனசிலம்பிற்கு . உரைகண்ட அடியார்க்கு நல்லார், பல்வேறு சிற்ப, நாடக நூல்களிலிருந்து மேற்கோள் பாடல்களை எடுத்துக் காட்டி விளக்கும் பாங்கு இனிமை பயப்பதாய் உள்ளதுமூலநூல் ஆசிரியரையும் . உரையாசிரியரையும் பற்றுக் கோடாகக் கொண்டு இக்கட்டுரை இயல்கின்றதுநாடக அரங்கின் . மண்ணகம் தெரிவு செய்வதற்குச் சிற்பநூலாரின் இலக்கணத்தைக் கடைப்பிடியாய் கொள்ள வேண்டும் என இளங்கோ கூறுகின்றார்இதனை . "எண்ணிய நூலோர் இயல்பினின் வழாது" என உரைக்கின்றார்மண் தெரிவு செய்யும் போது கெட்டியான வன்பால் நிலத்தைக் கைக்கொள்ள . மேலும் மதுரம் நாறும் அதாவது இனிமையான மணம் .வேண்டும் எனச் சிற்ப நூல்கள் உரைக்கின்றன வீசும் நிலம் தான் பார்வையாளர்களைச் சாந்தமான மனப்பாங்குடன் நாடகத்தைப் பார்க்கவைக்கும் எனப் பரதசேனாபதியம் உரைக்கின்றதுஉவர்ப்பு நிலம் களக்கத்தையும் கசப்பு நிலம் கேட் .டினையும் துவர்ப்பு நிலம் பயத்தையும் புளிப்பு நிலம் நோயையும் கார நிலம் பெரும் பசியையும் உண்டாக்கும் எனப் பரதசேனாபதியார் விவரிக்கின்றார். அரங்கத்தின் மேலே முத்து முதலிய மணிமாலைகளைத் தொங்கவிட்டனர். இவ்வாறாக நாடக இலக்கண நூல்களில் கூறப்பட்ட விதிகளுக்கேற்ப மாதவி ஆடிய அரங்கமானது நேர்த்தியாகச் சமைக்கப்பட்டதுஅவ்வரங்கத்தில் ஆடு .வார்க்கான இடமும், நட்டுவனார் நிற்க வேண்டிய இடமும், வாத்தியக் குழுவினர் அமைய வேண்டிய இடமும் என அவரவர்க்கான நிலைகளும் வகுத்துரைக்கப்பட்டுள்ளனஐ .ந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து நாட்டின் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நடக்கப்பெற்றனஅந்த நாடகமேடை உயரத்தில் அமைந்திருந்க .தே அன்றி மேல் விதானமோ திரைச்சீலைகளோ அழகு அலங்காரங்களோ காணப்படவில்லை. வெறும் வெளியாகவே தோன்றியதுஇ .றப்பது போல நடிக்கும் நாடக மாந்தர் அக்காட்சி முடிந்தவுடன் பார்வையாளர் அனைவரும் காணும்படியாக எழுந்து செல்லும் நிலை இருந்ததுஆனால் ., இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னால் நம் தமிழகத்து நாடகமேடைகள் எத்தகைய பொலிவும் அழகும் பெற்று விளங்கின என்பதற்குச் சிலம்பே சிறந்த சான்றாகும்இது மட்டுமல்லாமல் ., நாடக இலக்கண நூல்கள் அக்காலத்தில் பலராலும் எழுதப்பட்டதைக் காணும் போது பழந்தமிழரின் தொழில்நுட்ப அறிவு எத்தகையதாய் இருந்தது என்பதை உணர முடிக்கின்றதுமேற் .கோள் காட்டும் சிற்ப, நாடக நூல்களின் முழுமையான அறிவுச் செறிவை ஆராய்ந்து உலகிற்கு வழங்க வேண்டிய கடப்பாடு இனிவரும் ஆய்வாளர்களின் முன்னிலையில் உள்ளது என்பதையும் இவ்வாய்வுக் கட்டுரை பதிவு செய்ய விரும்புகின்றது.

**திறவுச்சொற்கள்:** இளங்கோவடிகள், அடியார்க்கு நல்லார், அரங்கம், சிலப்பதிகாரம், மண்ணகம்.

**முன்னுரை :**

நெஞ்சையள்ளும் செஞ்சொற் காவியமாம் சிலப்பதிகாரம் தமிழ் மொழியில் தோன்றிய முதல் காப்பியமாகும்இக்காப்பியத்தில் இளங்கோவடிகள் ., நெடுங்கண் மாதவி ஆடல் கலையில் தேர்ச்சி பெற்று அரசவையில் தலைக்கோல் பட்டத்திற்கு அரங்கேறி ஆடுகின்றாள்ஆடலுக்காக மாதவியின் . ஓர் அழகிய அரங்கம் அன்று அமைக்கப்பட்டதுபண்டை .த்தமிழ் முன்னோர்கள் அரங்கம் அமைய வேண்டிய இடம் அரங்கு எப்படி அமைக்கப் படவேண்டும் என்பவற்றையெல்லாம் அழகாக நூல்களில் வகுத்துக் கூறியுள்ளனர்இளங்கோவடிகள் அத்தகைய நூல்களை ஆராய்ந்து அவற் .றில் கூறப்பட்ட இலக்கண முறைப்படி தகுந்த இடத்தில் ஆடலரங்கு அமைக்கப்பட்டதாக பாடுகின்றார். அரங்கேற்று காதையில் இளங்கோவடிகள் பாடியுள்ள அரங்கு பற்றிய செய்திகளில் மண்ணியல் ஆராய்ச்சி நுட்பங்களும் நாடகமேடை அமைப்புக் குறித்த கலையும் அக் கலை அம்சங்களும் இன்றைய உலகத்தார்க்கு வியப்பை ஏற்படுத்துவனவாய் உள்ளன .சிலம்பிற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார், நாடக அரங்கு குறித்துப் பழந்தமிழ்ச் சிற்ப நூல்களை மேற்கோள் காட்டி விளக்கமாக உரைவரைந்துள்ளார் மூல நூலாசிரியரையும் உரையாசிரியரையும் ஆதாரமாகக் கொண்டு நாடக அரங்கு குறித்து அன்றைய நுட்பங்களை வெளிக் கொண்டு வருவது தான் இவ்வாய்வுக் கட்டுரையின் விழுமிய நோக்கமாகும்.

**அரங்குக்கான மண்ணகம்:**

சிலம்பை இசைத்த சேரன் தம்பி நாடக அரங்கம் அமைவதற்கான தரைப்பரப்பு குறித்து இரண்டு அடிகளில் மட்டும் சுருக்கமாகக் கூறிச் சென்றுள்ளார் ஆனால் அரங்கு அமைய வேண்டிய நிலம் . குறித்த விளக்கத்தைச் சிற்ப இலக்கண நூல்களைப் பார்த்து நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற குறிப்பையும் வழங்கியுள்ளார்.

*எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது*

*மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு* [1]

என்பது இளங்கோவடிகள் மண்ணகம் குறித்துக் கூறும் செய்திஇதில் எண்ணிய நூலோர் எ .னும் தொடர் சிற்ப நூல் வல்லாரைச் சுட்டுகின்றதுஅவர்கள் ஆராய்ந்து சொன்ன முறைப்படி வ .ழுவாமல் மேடைக்கான பூமிப்பரப்பைப் தேர்ந்தெடுத்துக் கொண்டனர் என இளங்கோவடிகள் கூறுகின்றார் . வள்ளுவப் பெருமானும் தான் கூறவந்த கருத்துக்கு ஆதரவாக அதன் சிறப்பு நூல் வல்லாரை எடுத்துக் காட்டுவது வழக்கம்மருந்து அதிகாரத்தின் முதல் குறட்பாவில் .

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்

வழிமுதலா எண்ணிய மூன்று [2]

என்று பாடும் போது வைத்திய நூல்வல்லாரை சுட்டிப் பேசுகின்றார். அது போலவே இளங்கோவடிகளும் ‘எண்ணிய நூலோர்’ எனச் சிற்ப நூலாரைத் துணைக்கு அழைத்துக் கொள்ளுகின்றார். இளங்கோவடிகள் சுருங்கச் சொன்னதை விளக்கும் வகையிம் அடியார்க்கு நல்லார் பல மேற்கோள்களை எடுத்துக் காட்டி அரங்கின் நிலம் குறித்த பல்வேறு செய்திகளைத் தமிழுலகிற்கு வழங்கியுள்ளார்.

ஆடல் அரங்கம் எத்தகைய தரைப்பரப்பில் அமைய வேண்டும் எனவும் எந்தச் சூழலில் அமைய

வேண்டும் எனவும் பழந்தமிழ்ச் சிற்ப நூல் பாடலை மேற்கோள் காட்டி அடியார்க்கு நல்லார் விளக்குகின்றார்.

தந்திரத்து அரங்கு இங்கு இயற்றும் காலை
அறனழித்து இயற்றா அழகு உடைத்தாகி
நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி
நாற்றமும் சுவையும் மதுரமும மாய்க்கனம்
தோற்றிய திண்மைச் சுவடது உடைத்தாய்
என்புஉமி கூர்ங்கல் களிஉவர் ஈளை
துன்பநீறு துகளிவை இன்றி
உளரகத் தாகி உளைமான் பூண்ட
தேரகத்து ஓடும் தெருவுமுகக் நோக்கிக்
கோடல் வேண்டும் ஆடுஅரங்கு அதுவே [3]

என்பது பாடல்.

சிற்ப நூலில் சொல்லப்பட்டபடி அரங்கம் அமைக்கும் போது மேற்கொள்ள வேண்டியவை இப்பாடலில் சொல்லப்பட்டுள்ளனகோ .யில் அந்தணர் இருக்கை, குளம், சோலை, முதலிய இடங்களைத் தவிர்த்த நிலப்பரப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும்மேடை அமைக்க கு .ழி தோண்டப்படும் இடத்தின் மண்ணானது நல்ல மணம் வீசுவதாகவும் திண்மையுடையதாகவும் இருக்க வேண்டும்எலும்பு ., உமி, பருக்கைக் கல், இல்லாதவையாய் அந்நிலம் அமைய வேண்டும் .களிமண் தரை உவர்மண் தரை . குழைவாக இருக்கும் ஈளைத் தரை, சாம்பல் தரை, தூசித்திரை ஆகிய இத்தரைகளை மேடை அமைக்கத் தேர்ந்தெடுக்கக் கூடாதுமேடை .யானது ஊரின் நடுவில் தேரோடும் வீதியை எதிர் நோக்கியதாய் அமைக்கப்பட வேண்டும் என்பது மேற்கண்ட பாடல் கூறும் கருத்தாகும்கோ .யில், குளம், சோலை, முதலிய இடங்களில் மேடை அமைத்தலாகாது எனக் கூறுவது நோக்கத் தக்கதுவழிபாடு செய்யும் . புனித இடத்தில் அமைதி நிலவவேண்டும்கோயிலின் புனிதம் கெடக் கூடாது என்பதால் அவ்விடம் . குளம் .தவிர்க்கப்படுகின்றது, சோலை, ஆகிய இடங்களில் மக்கள் கூடினால் குளத்தின் தூய்மையும் பயன்பாட்டுத் தன்மையும் கெட்டுப் போகும்சோல .ையின் இயற்கையழகும் நலமும் சிதைந்து போகும்எனவே தான் சமுதாய ஒழுங்கு கருதி அவ்விடங்களில் அரங்கம் அமைக்கலாகாது என . சிற்ப நூல் வல்லார் நிலத்தைக் .இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது கெட்டி நிலம்(வன் பால்), மிருது நிலம் (மென்பால்), இடைப்பட்ட நிலம்(இடைபால்) என மூன்றாக வகைப்படுத்தி அவற்றில் வன்மையான நிலத்தில் அரங்கம் அமைக்க வேண்டும் எனக் கூறுகின்றனர்இந்த நில வகைகளைக் . கண்டறிவதற்கும் அவர்கள் வழி கூறுகின்றனர்ஒரு குழியை அகழ் .ந்தெடுத்து மண்ணை மீண்டும் அக்குழியிலிட்டால் அக்குழி நிரம்பி மண்ணானது எஞ்சி நிற்குமானால் அது வன் பால் நிலமாகும் . தோண்டிய குழியில் மண்ணையிடும் போது அம்மண் தீர்ந்து போய் அக்குழி நிரம்பாமல் இருக்குமானால் அது மென்பால் நிலமாகும்தோ .ண்டிய குழியும் அகிலிட்ட மண்ணும் சரியாகப் போகுமானால் அது இடைப்பால் நிலமாகும். வன்பால் அல்லது கெட்டிப்பட்ட நிலமே அரங்கு செய்வதற்குரிய நிலமாகும்இதனை மேற்கண்ட பாடலில் .,

*கனம் தோற்றிய திண்மைச் சுவடது உடைத்தாய்* [4]

எனச் சிற்ப நூலார் குறித்துள்ளனர்.

**மண்ணிற்குச் சுவைகளுண்டு:**

இன்று வேளாண்மைத் துறையினர் மண்ணாராய்ச்சி நிலையம் வைத்து விவசாய நிலத்தில் என்னென்ன சத்துக்கள் நிறைந்துள்ளன அல்லது குறைந்துள்ளன என்பதைக் கண்டறிந்து அவற்றிற்கு ஏற்ப உரங்களை இடச் செய்கின்றனர்வாய்ந்த மண் (புளிப்பு) அமிலத்தன்மை ., காரத்தன்மை வாய்ந்த மண் என இவ்வாறாக மண்ணைத் தரம் பிரிக்கின்றனர்ஆண்டுகளுக்கு முன்பே மண்ணின் ஈராயிரம் . தரம் குறித்த அறிவியல் பழந்தமிழர்களிடத்தில் புழக்கத்தில் இருந்தது, அரங்கம் சமைக்கும் இடமானது, நாற்றமும் சுவையும் மதுரமுமாய் இருக்க வேண்டுமெனச் சிற்ப நூலார் குறித்துள்ளனர். இந்த இனிய மணம் நாறும் தரைப்பரப்பில் அரங்கு அமைந்தால் பார்வையாளர்களுக்குச் சாந்தமான மனச்சூழல் ஏற்படும் என்கின்றனர் ஏனைய .ஐந்து சுவைகள் கொண்ட மண்ணில் அமர்ந்தால் பார்வையாளர்களுக்கு என்னென்ன தீங்கு நேரும் என்பதையும் கூறியுள்ளனர்பரத .சேனாபதியம் என்னும் நாட்டியச் சாத்திரம் பேசும் நூலானது இத்தீங்குகளைப் பற்றி ஒரு வெண்பாவில் தெளிவாகச் சுட்டிச் செல்கின்றது.

உவர்ப்பின் கலக்கமாம் கைப்பின் வருங்கேடு
துவர்ப்பின் பயமாம் சுவைகள் அவற்றில் -
புளிநோய் பசிகாழ்ப்புப் பூங்கொடியே தித்திப்பு
அளிபெருகும் ஆவது அரங்கு [5]

உவர்ப்பு நிலமானது சுவைஞர்களுக்குக் கலக்கத்தை உண்டாக்கும்கசப்புத் தன்மை வாய்ந்த மண் . துவர்ப்பு .கேட்டினைத் தரும்ச் சுவையுடைய தரை அச்ச உணர்வைத் தூண்டும் (அ) அமிலத்தன்மை . .வியாதியை ஏற்படுத்தும் புளிப்புச் சுவை வாய்ந்த பூமி காரத்தன்மை மிகுந்த மண் பசியை அதிகப்படுத்தும்ஆகவே ., இச்சுவைகள் கொண்ட நிலத்தைத் தவிர்த்து மதுரம் நாறும் இனிய மணம் கொண்ட தரைப்பரப்பே அரங்கு செய்வதற்கு உகந்தது என்கின்றனர்இனிய நாற்றமும் சுவையும் . உடைய மண்ணைக் கண்டறியும் முறையையும் அவர்கள் மொழிந்துள்ளனர்நிலத்தை அக .ழ்ந்து வெளியிலிடும் மண்ணானது கொள்ளுச் செடியின் இலை, செந்நெல் பயிரின் தாள், செண்பக இலை, சுரபுன்னை இலை, ஆகியவற்றின் வாசத்தைப் போல் மணம் வீசுவதாய் இருந்தால் அது தித்திப்பு நிலம் என வரையறுக்குமாறு கூறுகின்றனர்அடிகளில் எழுதிச் சென்ற இளங்கோவடிகள் இரு . மண்ணகத்திற்கு அடியார்க்கு நல்லார் ஒரு மண்ணியல் ஆராய்ச்சியே செய்து பழைய நூல் ஆதாரங்களைக் காட்டி மிகச் சிறந்த தரவுகளை இன்றைய தமிழர் முன்னிலையில் வைத்திருக்கிறார் என்பதை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இன்பம் மிகுவதாய் இனிமை பயப்பதாய் உள்ளது.

**அரங்கம் அளக்கும் கோல்:**

பண்டைத் தமிழகத்தில் ஆடலரங்குக்கான மேடையின் நீள அகல உயரங்கள் எவ்வளவு இருக்க வேண்டும் என்கிற கணக்கு வரையறை வைத்து இருந்தார்கள்மேடையை அளக்கும் கோல் . அந்தக் கோ .அன்றிருந்ததுலை எப்படி உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்பதையும் நாடக இலக்கண நூல்கள் சொல்லி வைத்துள்ளனஅதன .டிப்படையில் இளங்கோவடிகள்,

புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை ஒருசாண் வளர்ந்த கொண்டு

நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்

கோல்அளவு இருபத்து நால்விரல் ஆக [6]

என்று அரங்கம் அளக்கும் கோலை உருவாக்கும் விதம் பற்றி உரைக்கின்றார்பொதிகை மலை . போன்ற புண்ணிய மலைகளில் வளர்ந்திருக்கும் மூங்கில் கழைகளில் ஒரு கணுவுக்கும் அடுத்த கணுவுக்கும் இடையில் உள்ள நீளம் ஒரு சாண் அளவு இருக்கும் படியான கழையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் மிக்க உயரமும் மிகுந்த குள்ளமும் இல்லாத உத்தம மனிதனின் கைப்பெரு விரலில் .24 பெருவிரல் அளவுக்கு அந்த மூங்கில் கலையை நறுக்கி எடுத்துக் கொண்டால் அதுவே அரங்கம் அளக்கும் கோலாகும்அளந்து கணக்கிடுவதற்கு நீட்டல் அளவை கோல அக்காலத்தில் நிலத்தை . இருந்தநாடக அரங்கு அமை .ப்பதற்கான அளவைக் கோல் பற்றியும் நாடக நூல் உரைக்கின்றது.

ஒத்த அதுமுதல் உயர்ந்து வருகணக்கின்

உத்தமன் பெருவிரல் இருபத்து நாலுள

கோகேல் கோடல் குறியறிந் தோரே [7]

என்பது நாடக நூல் கூறும் செய்தியாகும்.

**அரங்க அமைப்பு:**

மாதவி ஆடிய நாடக அரங்கின் அமைப்பினைப் பற்றி இளங்கோவடிகள் நூல் நெறி மரபு வழுவாமல் எடுத்துரைக்கின்றார் தரைப்பரப்பிலிருந்து ஒரு கோல் .உயரத்தில் மேடை அமைக்கப்பட வேண்டும் . மேடையின் அகலம் ஏழுகோல் அளவும் நீளம் எட்டுக்கோல் அளவும் இருக்குமாறு வகுத்து அமைக்க வேண்டும்இதனைச் .மேடைப்பரப்பிலிருந்து மேல் நால் கோல் உயரத்தில் அமைக்கப்பட வேண்டும் . சிலம்பு,

*எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து*

*ஒருகோல் உயர்த்து உறுப்பின தாகி*

*உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை*

*வைத்து இடைநிலம் நாற்கோ லாக* [8]

என விளக்கிச் செல்கின்றது.

இதற்கான மேற்கோள் செய்யுளை அடியார்க்கு நல்லார், செயிற்றியனார்

என்னும் நாடக இலக்கண நூலிலிருந்து,

*அக்கோல் ஏழுஅகல் எட்டு நீண்டும்*

*ஒப்பால் உயர்வும் ஒரு கோலாகும்* [9]

என எடுத்துக் காட்டுகின்றார்மேடையில் ஏறிச் . செல்வதற்கும் இறங்கி வருவதற்கும் தனித்தனியே பாதைகள் வகுக்கப்பட்டனமேடைத் . தூண்களின் நிழலானது மேடையிலும் மக்கள் அமர்ந்திருக்கும் பகுதியிலும் விழாதவாறு தகுந்த இடத்தில் விளக்குகள் வைக்கப்பட்டன இதனைச் .சிலம்பு,

தூண் நிழல் புறப்பட மாண்விளக்கு எடுத்து [10]

என இசைக்கின்றதுஇவ்வாறு விளக்கைப் பொருந்த வைத்தபின் அரங்க மேடையின் இடப்பக்கத் . தூணிற்கு ஒத்துவருமாறு ஒருமுக எழினி என்னும் திரைச்சீலை கட்டப்பட்டதுவலப்பக்கத்தில் . அமைந்த இருதூண்களுக்கு இடையில் ஒருதிரைச்சீலை சேர்க்கப்பட்டதுஇது . 'பொருமுக எழினி' எனப் பெயர்ப்பெறும்மேற்கட் .டிலிருந்து கீழிறங்கி வருமாறு அமைக்கப்பட்டது கரந்துவரல் எழினியாகும் .

இவ்வாறு, மூன்று திரைச்சீலைகள் அரங்கமேடையில் பொருந்துமாறு அமைக்கப்பட்டனஅரங்கின் . நெற்றிப்பகுதியில் அரசர், அந்தணர், வாணிகர், சூத்திரர் ஆகிய நால் வருணத்தாரின் பூதங்களைத் திரைச்சீலையில் ஓவியங்களாக எழுதிக் காண்போர்க்குக் காட்சி இன்பம் வழங்குமாறு தொங்கவிட்டனர்இதனை இளங்கோவடிகள் .,

தோற்றிய வரங்கிற் தொழுதனர் ஏத்தப்

பூதரை எழுதி மேல்நிலை வைத்து [11]

எனப் பாடுகின்றார்அடியார்க்கு நல்லார் நால்வருணப் பூத .ருக்கான மேற்கோள் செய்யுளைக்,

கூறிய உறுப்பிற் குறியொடு புணர்ந்தாங்கு
ஆடுநர்க்கு இயற்றும் அரங்கின் நெற்றிமிசை
வழுவில் பூத நான்கு முறைப்பட
எழுதினர் இயற்ற இயல்புணர்ந் தோரே [12]

எனச் சீவகசிந்தாமணி காப்பியத்திலிருந்து எடுத்துக் காட்டுகின்றார்.

**முடிவுரை:**

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தமிழறிவும் கற்பனை வளமும் கொண்டவர்களாக மட்டும் அமைந்திருக்கவில்லை. பல்கேள்வித் துறைபோகிய தொல்லானை நல்லாசிரியர்களாகப் பொலிந்து தோன்றினர்சிலம்பின் ஆசான் ., குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்து குடக்கோச் சேரல் இளங்கோவடிகள், எத்தகைய பல்துறை ஞானப் பெருவள்ளலாகத் திகழ்ந்தார் என்பதை அவர் வழங்கிய சிலப்பதிகாரமே தெள்ளத் தெளிவாக விளக்குகின்றதுஅவர் பாடிய அரங்கேற்று . காதையே மிகச்சிறந்த பல்துறை அறிவுச் சுரங்கமாகப் பொலிந்து கொண்டிருக்கின்றதுஇக் .காதையில், இசையைப் பற்றிப் பேசும்போது அவர் இசைப் புலவராகவே மாறி விடுகின்றார்நாடக மேடை . அமைப்பது குறித ்து தரைப்பகுதியைத் தெரிவுசெய்யும் பொழுது இளங்கோ மண்ணியல் அறிஞராகத் தோற்றமளிக்கின்றார்அரங்கம் சமைக்கும் போது அவர் நாடக வி .ற்பன்னராகவே காட்சிக் கொடுக்கின்றார்போது அவள் ஆடிய நுட்பத்தையும் மாதவி ஆடலின் ., ஆடல் வகைகளையும் விவரிக்கும் போது அவர் பரத சாத்திரத்தில் கரைகண்டவர் என்பது தெரிகின்றதுஇவை . மட்டுமல்லாமல், புகாரிலிருந்து கண்ணகி புறப்பட்டுச் சென்று மதுரை நகரைத் தீக்குளிப்பாட்டிச் சேர நாட்டின் மலைமேல் ஏறி வானகம் சென்றது வரையில் இளங்கோவடிகள் காப்பியத்தை வழிநடத்திச் செல்லும் பாங்கைப் பார்க்கும் போது தமிழக நிலவியலைப் புரிந்து வைத்திருந்த நிலவியல் நிபுணராகவே நிலைபெற்று நிற்கின்றார்இளங்கோவடிகளின் பல்கேள்விக் துறைபோகிய . காதை அரங்கேற்று .பேரறிவானது சிலம்பின் வழி பளிச்சிட்டு மின்னுகின்றதுயே தமிழரின் அறிவியல் வரலாற்றையும் கலைத் தேர்ச்சியையும் விளக்குவதாய் உள்ளதுஉரையாசிரியர் அடியார்க்கு . நல்லாரின் மேற்கோள்களுடன் கூடிய விளக்கமானது சிலம்பின் அறிவுப்பரப்பை மேலும் விசாலப்படுத்துகின்றதுஇளங்கோ ., அடியார்க்கு நல்லார் ஆகிய இருவரின் அம்சொல் நுண்தேர்ச்சிப் புலமையை ஆய்வு செய்து அகிலத்திற்கு வெளிச்சமிட்டுக் காட்டவேண்டியது அறிவுசார் தமிழ்ப் பெருமக்களின் தலையாய கடமையாகும்.

*********

**அடிக்குறிப்புகள்:**

1. சிலப்பதிகாரம், உரையாசிரியர் சிலம்பொலி சு செல்லப்பன், முதல் பதிப்பு 2016.
2. திருக்குறள், உரையாசிரியர் புலியூர்க் கேசிகன், 28ஆம் பதிப்பு 2011.
3. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரையும், உ.வேசா., 2021.
4. மேற்படி
5. மேற்படி
6. சிலப்பதிகாரம், உரையாசிரியர் சிலம்பொலி சு செல்லப்பன், முதல் பதிப்பு 2016.
7. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், அடியாருக்கு நல்லாருரையும், உ.வேசா., 2021.
8. சிலப்பதிகாரம், உரையாசிரியர் சிலம்பொலி சு செல்லப்பன், முதல் பதிப்பு 2016.
9. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், அடியாருக்கு நல்லாருரையும், உ.வேசா., 2021.
10. சிலப்பதிகாரம், உரையாசிரியர் சிலம்பொலி சு செல்லப்பன், முதல் பதிப்பு 2016.
11. மேற்படி
12. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், அடியாருக்கு நல்லாருரையும், உ.வேசா., 2021

**துணை நூற்பட்டியல்:**


1. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும்
   அடியாருக்கு நல்லாருரையும்
   உ. வேசாமிநாத .ய்யர்
   உ. வேசாமிநாத .ய்யர் நூல்நிலையம், 2021
   சென்னை.
2. திருக்குறள்
   உரையாசிரியர் புலியூர்க் கேசிகன்
   28ஆம் பதிப்பு, ஜூலை 2011, பூம்புகார் பதிப்பகம்
   127, பிரகாசம் சாலை
   சென்னை 108
3. சிலப்பதிகாரம் தெளிவுரை
   உரையாசிரியர், சிலம்பொலி சு. செல்லப்பன்
   முதல் பதிப்பு 2016,
   பாரதி நிலையம்
   தியாகராய நகர்
   சென்னை 17.